# தங்காலை பிரதேச சபை

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

## 01. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 31 திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் தங்காலை பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது முறையான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான தங்காலை பிரதேச சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங் களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 753,012 தொகை பெறுமதியான 07 நிலையான சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள், சொத்துக்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மூலதனக் கணக்கிற்கு வருமானத்திலிருந்து பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 செலவுத் தலைப்புக்கள் தொடர்பாக பிரதான பேரேட்டின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 10,734,000 தொகையாக காணப்பட்டதுடன் வாக்குப் பணப் பேரேட்டின் பிரகாரம் கூட்டுத்தொகை ரூபா 10,154,758 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 579,242 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் போது 03 செலவு விடயங்களுக்கான கூட்டுத்தொகை ரூபா 169,860 தொகை குறிப்பிட்ட செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொடுப்பனவு காசேட்டின் பிரகாரம் 11 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளின் மூலம் ரூபா 157,158 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதும் அக் கொடுப்பனவு பிரதான காசேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) பதவியணிக் கடன் தவணைப் பணமாக 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,750 தொகையொன்று மிகையாக அறவிடப்பட்டிருந்ததுடன், அந்த தொகை ஐந்தொகையில் நடைமுறை பொறுப்புக்கள் என காட்டப்படாமல் நிலுவை பதவியணிக் கடன் மீதியில் இருந்து கழித்து காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கையிருப்பு மீதி ரூபா 391,851 தொகை எனினும், கையிருப்பு பதிவேட்டின் பிரகாரம் அம் மீதி ரூபா 845,307 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 453,456 இற்கான கையிருப்பு குறைவாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது,

(எ) கணக்குப் பதிவு விடயங்களுக்காக எழுதப்பட்ட நாட்குறிப்புக்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை இனங்காணக் கூடிய விதமாக போதியளவு தகவல்கள் நாட்குறிப்புக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிகைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 635,795 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்காக சான்றுகள் இன்மை

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அத்துடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 946,279 ஆகும். பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் காலப்பகுப்பாய்வு பின்வருமாறு ஆகும்.

| | கணக்காய்வு ஐய வினாக்கள் |
|---|---|
| 03 மாதங்களுக்கு குறைவு | 04 |
| 03 மாதங்கள் முதல் 01 வருடம் வரை | 03 |

(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை

நிலையான வைப்புப் பதிவேடு மற்றும் மீதியினை உறுதிப்படுத்தும் கடிதம் என்பன காணப்படாமையால் ரூபா 1,437,058 இற்கான வங்கி வைப்புக்களும் துணைப் பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் இன்மையால் ரூபா 635,795 இற்கான நிர்மாண வேலை கடன்கொடுத்தோரையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

1.3.4 இணக்கமின்மைகள்

இலங்கை குடியசரசின் நிதிப் பிரமாணக் கோவையில் 1645 மற்றும் 1646 ஏற்பாடுகளின் பிரகாரம் மாதாந்த வாகனங்களின் செயலாற்றுகை பொழிப்புடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 12 வாகனங்களின் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

## 02. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,330,053 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,105,322 ஆக காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதீப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை | மதிப்பீடு | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீத வரி மற்றும் வரி | 23 | 8 | 70 | 24 | 13 | 28 |
| வாடகை | 3,556 | 3,763 | 459 | 3,452 | 3,188 | 666 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 992 | 845 | 349 | 662 | 628 | 472 |
| சேவைக் கட்டணம் | 5,000 | 2,060 | 2,479 | 7,000 | 18,667 | 3,333 |
| எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணம் | 2,015 | 988 | 1,028 | 1,304 | 2,100 | 130 |
| ஏனைய வருமானங்கள் | 61 | 147 | 280 | 147 | 0 | 366 |

#### 2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதிமன்றத்தினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 1,027,768 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

#### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 2,479,421 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.4 நிலுவை வருமானத்தை அறவிடப்படாமை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விபரங்கள் பின்வருமாறு

(i) பிரிவு 134(3) — ஏக்கர் வரி ரூபா 69,604 மற்றும் வர்த்தக வரி ரூபா 168,453 என்பன 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) பிரிவு 150(iv) — நிலுவை அனுமதிப் பத்திர கட்டணம் ரூபா 180,610 தொகை 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) பிரிவு 153(1) — அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்காக வரிகளை விதிக்கும் போது அந்த காணியில் மூலதனக் காணிப் பெறுமதியின் 2% விஞ்சாத வரி ஒன்றினை வருடாந்தம் அறவிட முடியுமாக இருந்து அவ்வாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) பிரிவு 159(1) — நிலுவை கடை வாடகை ரூபா 470,380 தொகை 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவு உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவுகள் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் | பாதீட்டு | உள்ளவாறான | முரண் |
| | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 | ரூபா. '000 |
| ஆளுக்குரிய வேதனம் | 15,541 | 14,310 | 1,231 | 13,892 | 12,529 | 1,363 |
| ஏனையவை | 11,367 | 9,099 | 2,268 | 9,674 | 9,613 | 61 |
| உப கூட்டுத் தொகை | 26,908 | 23,409 | 3,499 | 23,566 | 22,142 | 1,424 |
| மூலதன செலவுகள் | 16,323 | 40,306 | (23,983) | 16,553 | 60,232 | (43,679) |
| மொத்தக் கூட்டுத் தொகை | 43,231 | 63,715 | (20,484) | 40,119 | 82,374 | (42,255) |

2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

2.4.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 11,851,919 ஆக காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,048,598 ஆகும்.

2.4.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,660,606 ஆகும். அம் மீதியில் 2 வருட காலத்தை விஞ்சிய ரூபா 3,400 தொகையொன்று காணப்பட்டது.

(ஆ) 2010 ஜனவரி மாதம் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்கள் இருவரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 158,148 இற்கான பதவியணிக் கடன் மீதியினை ஒரே முறையில் அறவிடாமல் தவணை அடிப்படையில் அறவிடப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.

2.4.3 அசையாத நடைமுறை சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியுள்ள அசையாது காணப்படும் 02 வங்கி நடைமுறை கணக்குகளில் ரூபா 80,314 செயற்படாத பண மீதியொன்று காணப்பட்டது.

2.5 மிகை விதிப்புக்கள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நியதிச் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களுக்காக ரூபா 29,690 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.6 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணிகள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் தரம் | 01 | 01 |
| இரண்டாம் தரம் | 12 | 15 |
| ஆரம்ப தரம் | 17 | 20 |
| ஏனையவை(அமைய, தற்காலிக) | 03 | 35 |

(ஆ) 2006 ஏப்ரல் 10, 2006 மே 10, 2006 ஆகஸ்ட் 01 திகதிகளைக் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்று நிருப இலக்கம் 28, 28(1), 28(11) இன் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாமல் சபையினால் அமைய, தற்காலிக, ஊழியர் உட்பட 38 பேர் பணியில் அமர்த்தப்பட்டு சேவையில் ஈடுபடுத்தி சம்பளம் செலுத்தியிருந்தனர்.

2.7 செயற்பாட்டுத் திறமையின்மை

------------------------------------------------

(அ) வீதி விளக்குகள் பராமரிப்பு விடயங்களுக்காக மின் தொழில்நுட்பவியலாளருக்கு வழங்கியிருந்த மின் குமிழ்களின் எண்ணிக்கை மற்றும் அவர் பராமரித்த மின் குமிழ்களின் எண்ணிக்கை இடையே ஒவ்வொரு மாதமும் முரண்பாடுகள் காணப்பட்டது. அத்துடன் 2010 அக்டோபர் 15 திகதியில் உள்ளவாறு மின் தொழில்நுட்பவியலாளர் பெற்றிருந்த மின் குமிழ்களின் எண்ணிக்கையை விட 27 மின் குமிழ்கள் மிகையாக பராமரித்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. மேலும் மின் தொழில்நுட்ப அலுவலரிடம் பேணப்படும் அறிக்கை பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் ஜே.ஸீ.பீ. இயந்திரம் 12 தினங்களில் 45.9 மணித்தியாலங்களுக்காக வாடகைக்காக வழங்கப்பட்டிருந்த போதும் அவ்வாறு வாடகைக்கு கொடுப்பதற்கு பொறுப்பு வாய்ந்த அலுவலர் ஒருவரின் கட்டளை ஒன்று கிடைத்திருக்கவில்லை.

03. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) கையிருப்பு கட்டுப்பாடு

(உ) வாகனக் கட்டுப்பாடு